REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 10உ வியாழன் (23—5—57) ★ வெளியூர்: வைகாசி 11உ வெள்ளி (24—5—57) இதழ் [295

'சுதந்திரம் முன்பு; சுபிட்சம் பின்பு!'

"சீன நாட்டில் மா சே-துங் தலைமையில் நடைபெற்ற தேசீய விடுதலைப் புரட்சியின்போது, 'ஒரே உலகம்' என்ற நூலை எழுதிய வெண்டல் வெல்கி, மா சே-துங்கிடம் சென்று, 'உங்கள் அரசியல் கொள்கை என்ன?' என்றார். அதற்கு மா சே-துங், 'எங்கள் கோரிக்கை முதலில் சீன நாட்டின் விடுதலை; பின்புதான் சுபீட்சத்தைப் பற்றியது' என்றார்."

—இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி மத்திய சபை 7-ம் ஆண்டுவிழா கடந்த ஞாயிறன்று பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றபோது, மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு கூறினர். —'சுதந்திரன்': 19—5—57

வரிப்பளு சுமத்துவதில் நியாயம் வேண்டாமா?

ஒரு பிரதேசத்தவர் பலனடையும் திட்டங்களுக்காக மற்றவரும் வரி தர வேண்டுமென்பது நேர்மையா?

பண்டித நேரு பெரியவர் என்பதற்காக அநியாயத்தைக் கண்டிக்காமலிருக்கலாமா?

ஆச்சாரியார் எழுப்பும் கண்டனக் குரல்

நாட்டின் சில பிரதேசங்களுக்கான சில திட்டங்களை, ஐந்தாண்டுத் திட்டம் அடக்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்காக நம்மீது வரி விதிக்கிறார்கள்.

"ஆனல், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அத்தகு திட்டங்களால் ஏற்படக்கூடிய பலன்கள்பற்றி எவ்வித அனுமானமும் இன்றி, எல்லா மக்களுக்கும் மறைமுக வரி விதிப்பது தவருனதாகும்.

"இது ஒன்றும் பிரிவினைக்கான யோசனை அல்ல; மாருக, வரிப்பளுவைச் சுமத்துவதில், நேர்மையும், நியாயமும் இருக்கவேண்டுமென்கிறோம்; அவ்வளவுதான்.

"எங்கெல்லாம் அபிவிருத்தித் திட்டங்களினுல் நேரடியான பலன்களை அனுபவிக்கிற மக்கள் இருக்கிறார்களோ, அந்தப் பகுதி மக்களுக்கு 'செஸ்' வரிகள் விதிக்கலாம்; இதை விடுத்து, இரயில் கட்டணத்தை உயர்த்துவதும், அஞ்சல் அட்டை விலையை அதிகப்படுத்துவதும் சரியா, நியாயமா?"

—என்று, திரு. ஆச்சாரியார் அவர்கள், சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் 'புதிய வரி விதிப்புகள்' பற்றிக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"திட்டத்திற்காக, சர்க்கார் அந்நிய உதவிகளை எதிர்பார்க்கிறார்கள்; அந்நிய உதவியையும், அந்நியக் கடன் உதவியையும் எதிர்பார்க்கிறார்கள்; இவை எல்லாம் பின்னல் கூட்டுவட்டியுடன் நம் தலையில் வந்து விழும். அந்நிய உதவியை எதிர்பார்த்துக்கொண்டே நாம் பல நாள் வாழமுடியாது.

"எனவே நாம் ஒரு திட்டம்—மக்களுக்கு துன்பத்தை அல்ல; மகிழ்ச்சியைத் தரக்கூடிய திட்டம்—சரியான முறையான திட்டம் தயாரிக்கவிரும்பினுல், இந்த அம்சங்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பத்திரிகைகளின் கடமை

"சர்க்கார் முதலில், பத்திரிகைக் காகிதங்களுக்கான 'எக்சைஸ்' வரியையும் உயர்த்தப் போவதாகக் கூறினர்; பின்னர், 'தவறு நிகழ்ந்துவிட்டது' எனக் கூறி, அதனைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

"நாட்டில் உள்ள பல பத்திரிகைகளும் எழுதிய தலையங்கங்களைப் பார்த்தால், பட்ஜெட் பற்றிய விமர்சனங்கள் நோகாமல் சர்க்காரைக் கண்டிப்பனவாக இருப்பதைக் காணலாம்; துவக்கத்தில் இருந்த வேகம், அந்தத் தலையங்கங்களில் இல்லை. அந்த வேகம், பத்திரிகைக் காகித வரி விதிப்பு வாபஸ் பெறப்படுவதற்கு முன்பிருந்தது; பின்னர் குறைந்துவிட்டது. பத்திரிகைகளின் விமரிசனங்கள் இந்த முறையில் அமையக்கூடாது.

"உண்மைதான்; ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள உரிமை உடையவர்கள்தான். ஆனல், பத்திரிகைகளுக்குத் திட்டமானதோர் பொறுப்பு இருக்கிறது.

நேரு என்பதற்காக...

"நேரு பிரதமராயிருக்கிறார் என்பதால்—அவரை நாம் பெரிதாக மதிக்கிறோம் என்பதால்—மக்கள், சர்க்காரைக் கண்டிப்பதற்குத் தயங்கக்கூடாது.

"என்னதான் சொல்லப்பட்டாலும், செய்யப்பட்டாலும் பிரதமர், சர்க்காரைச் சேர்ந்தவர்; நிதிமந்திரியை அவர் ஆதரித்துத்தான் ஆக வேண்டும். எனவே, பிரதமர், பட்ஜெட் பற்றி பாராட்டுகிறார் என்பதால், நாம் அதனைக் கண்டிப்பதற்குத் தயங்கக்கூடாது."

தீண்டாமை குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்

தேர்தலில் நிற்பதற்குத் தடை

பம்பாய், மே 22—

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் கிராமப் பஞ்சாயத்துக்கள், நகர சபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள் மற்றும் கார்ப்பரேஷன் இவற்றிற்கான தேர்தலில் நிற்பதற்கு, பம்பாய் மாநிலத்தில் தடைவரும் என்று தெரியவருகிறது. இந்த நோக்கம் ஈடேறும் வகையில் ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல் விதிகளை மாற்றுவதற்கான மசோதா ஒன்று பம்பாய் சர்க்காரால் தயாரிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

கழக வீரர் தாளமுத்து படுகொலை

தூத்துக்குடியில் பயங்கர சம்பவங்கள்

செய்தி கேட்டு பொதுச்செயலாளர் திடுக்கிட்டார்

மதுரை எஸ். முத்து தூத்துக்குடிக்கு விரைந்துள்ளார்

தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்களுள் ஒருவரான தோழர் தாளமுத்து அவர்கள், பட்டப்பகலில் இன்று காலை 10-மணியளவில், மேற்கு காட்டன் சாலையில் நண்பர் ஒருவருடன் வந்துகொண்டிருக்கையில், வெறிகொண்ட சிலர், அவரைக் கொடிய ஆயுதங்களால்—அரிவாள்களால் தாக்கியிருக்கின்றனர்.

தாளமுத்துவுடன் வந்த இராசு என்ற நெசவுத் தொழிலாளியும் தாக்கப்பட்டிருக்கிறார்.

மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்ட தோழர் தாளமுத்து அவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்; அங்கு அவரிடம் போலீசார் மரண வாக்குமூலம் பெற்றிருக்கின்றனர்.

மாலையில், 'தோழர் தாளமுத்து தாக்குதலுக்குப் பலியானர்' என்ற சோகச் செய்தியையே மருத்துவமனையினர் தந்திருக்கின்றனர்.

கண்ணீரை ஆறுதலாகத் தருகிறோம்

சுமார் 40 வயதான தோழர் தாளமுத்து அவர்கள், சமீபத்தில்தான் ஸ்பின்னிங் ஆலைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் பதவியிலிருந்து விலகினர்.

நகர தொழிலாளர்களின் பேரன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரராயிருந்த தொழிலாளர் தலைவர் தோழர் தாளமுத்து அவர்கள், தூத்துக்குடி கழக முன்னணி வீரர்களுள் மிக முக்கியமானவர். பல ஆண்டுகளாக, கழக வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளவர்.

தோழர் தாளமுத்து அவர்களின் மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம். அவரது மறைவு நமக்கு ஆருத்துயரை அளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவரது உறவினருக்கு நாம் நமது கண்ணீரைத்தான் ஆறுதலாகத் தரவேண்டியிருக்கிறது.

பொதுச்செயலாளர் திடுக்கிட்டார்

சென்னை, மே 23—

தூத்துக்குடி தி. மு. க. தோழர் தாளமுத்து அவர்கள் நேற்று காலை 10-மணியளவில் பயங்கர ஆயுதந்தரித்த சிலரால் தாக்கப்பட்டார் என்ற செய்தி நண்பகல் தந்தி மூலம் கிடைத்ததும், பொதுச்செயலாளர் அவர்கள் திடுக்கிட்டுப்போனர்.

உடனே, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் முத்து அவர்களை, தலைமை, நிலையச் சார்பில் நிலைமைகளைக் கவனிக்கவும், தோழர்களுக்கு ஆறுதல் கூறவுமாக தூத்துக்குடி செல்லுமாறு தந்தி மூலம் பணித்தார்கள்.

கவலையோடு நிலைமையைப் பரிசீலித்துக் கொண்டிருக்கும்போது, தாக்கப்பட்ட தோழர் தாளமுத்து அவர்கள் மருத்துவ மனையில் உயிர் நீத்தார் என்ற செய்தி வந்தது; பொதுச் செயலாளரும் இதரரும் பேரதிர்ச்சிக்கு ஆளானர்கள்.

தூத்துக்குடியில் கழக முன்னணி வீரர்களில் மற்றொருவர் இதுபோல படுகொலைக்கு ஆளான துயரம், மிகக் கவலை அளித்துள்ளது.

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு பலியானதால் ஏற்பட்ட துக்கமே இன்னும் மறையவில்லை; அதற்குள், ஏழெட்டு மாதங்களுக்குள் மற்றுமொரு பேரிடியின் தாக்குதலை எப்படித் தாங்கிக் கொள்வது!

மற்றொரு கொலைச் சம்பவம்

தோழர் தாளமுத்து தாக்கப்பட்ட பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம், அரிவாள் ஏந்திய மற்றொரு கூட்டம், அண்மையில் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட தோழர் எம். இரத்தினத்தை, தச்சர் தெரு, எஸ். எஸ். பிள்ளை தெரு, சத்திரத் தெரு, ஆகியவை சந்திக்கும் முனையில், அவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, தாக்கியிருக்கின்றனர். அவரது கால் துண்டிக்கப்பட்டு, அவர் ஸ்தலத்திலேயே உயிர் நீத்திருக்கிறார்.

மற்றும் இருவர் தாக்கப்பட்டனர்

ஒரு பீடித் தொழிற்சாலை அதிபரான ஈ. சவரிமுத்து என்பவரும், ஒரு கடையில் வேலை பார்க்கும் என். என். பரமசிவம் என்பவரும் அரிவாளால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

நகரில் பரபரப்பு

அடுத்தடுத்து, நடைபெற்ற கொலைச் சம்பவங்களும், தாக்குதல்களுமான வெறிச் சம்பவங்கள், நகர மக்களிடையே பெரும் பரபரப்பை ஊட்டியுள்ளதுடன் கவலையையும் தந்துள்ளது.

தோழர் தாளமுத்து அவர்கள் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதின் விளைவாக, அன்று மாலை நூற்பு ஆலைத் தொழிலாளர் எவரும் வேலைக்குச் செல்லவில்லை ஆலை மூடிக் கிடந்தது.

முழுத் தகவல்கள்

இந்தச் சம்பவங்கள் பற்றி, தலைமை நிலையத்தால் தூத்துக்குடி செல்ல பணிக்கப்பட்டுள்ள தோழர் முத்து அவர்களிடமிருந்து முழுத் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

'இன்புளுயன்சா'வை முறியடிக்கத் திட்டம்

சென்னை, மே 22—

சென்னை சுகாதார இலாகா அதிகாரிகள், நகர சபை அதிகாரிகள் ஆகியோர் 'இன்புளுயன்சா' நோய்த் தடுப்பு, ஒழிப்பு வேலைகள் பற்றி விவாதித்துள்ளனர்.

தண்டையார்பேட்டையில் உள்ள மருத்துவ விடுதியில் மேலும் 300 படுக்கைகள் வசதி செய்யவும் அரசாங்க மானியத்துடன் தேவையான மருந்துகள்—நர்சுகள்—வண்டிகள் முதலிய வசதிகள் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

காப்பி, டீ விலை உயர்வு

சென்னை, மே 22—

சென்னை சிற்றுண்டிச் சாலை சொந்தக்காரர்களின் சங்கம், புதிய வரி விதிப்பில் சக்கரை, காப்பி, முதலியவற்றின் விலை உயர்த்தப்பட்டுள்ளதை காரணமாகக் காட்டி, இனி காப்பி, டீ ஆகியவற்றின் விலையில் ஒரு கோப்பைக்கு அரையணு உயர்த்துவதென முடிவு செய்துள்ளது.

சிறு துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கும் திட்டத்தில் மாநில அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவில் பாதியை ஏற்க இந்திய அரசாங்கம் முன்வரக்கூடும் என்று திட்ட உதவி அமைச்சர் எஸ். எஸ். மிஸ்ரா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—5—57 வியாழன்

எருதின் புண் காக்கை அறியுமோ?

ஆங்கில ஏகாதிபத்தியம் வெளியேறி பத்தாண்டுக் காலம் ஆகிறது. அன்று முதல் இன்று வரை காங்கிரசுக் கட்சியினர்தான் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளனர்.

போர்க்காலத்தில் புகைவண்டிப் பிரயாணம் நெருக்கடிக் கட்டத்தை அடைந்தது. அன்று ஏற்பட்ட பிரயாண நெருக்கடி இன்று வரையிலும் குறைந்தபாடில்லை. வர வர நெருக்கடி கூடிக்கொண்டே போகிறது.

புகைவண்டியில் பிரயாணம் செய்கின்ற மக்களுக்கு வர வர நெருக்கடி கூடிக்கொண்டு வருவது போன்றே, பிரயாணக் கட்டணமும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேபோகிறது.

ஒரு கல் தொலைவுக்கு காலணு என்பது தொலைந்து பல ஆண்டாகிவிட்டது; இப்பொழுது அரையணு கொடுத்தால்தான் ஒரு கல் தொலைவுக்கு புகைவண்டியில் பிரயாணம் செய்ய முடியும்.

'தம்பிடிக்கு தம்பிடி வட்டி' என்று கேலியாகக் கூறப்படும் வசனத்தை அனைவரும் அறிவர். அதற்கொப்பத்தான் நூற்றுக்கு நூறு கட்டணத்தை உயர்த்தி இருக்கின்றது காங்கிரசு ஆட்சி.

ஒன்றுக்கு இரு மடங்காகக் கட்டணத்தைச் செலுத்தினுலும் பாதகமில்லை, புகைவண்டி பிரயாணத்தில் குறைந்த பட்ச வசதியாவது கிடைக்கின்றதா என்றால், அதற்கும் வகைகிடையாது. அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, துரித வண்டியாக இருந்தாலும், நகரும் வண்டியாக இருந்தாலும், குறிப்பிட்ட இடத்தைவிட்டு புறப்படுவது கிடையாது. புறப்படும் இடத்திலேயே தாமதம் ஏற்படுகின்றது என்றால், போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைவது, குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்வது சாத்தியமாகுமா? நான்கு மணி ஐந்து மணி நேரம் தாமதித்துச் செல்லாத புகைவண்டியை, பிரயாணிகள் எவரும் இதுவரை பார்த்திருக்க முடியாது என்பது உண்மையிலும் உண்மையாகும்.

மூன்றும் வகுப்புப் பெட்டிகளில் கிடைத்துவரும் இடவசதியை விளக்க, ஒன்றுக்கு ஒன்றரை பங்கு கட்டணம் செலுத்தி இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்கின்றவர்கள், இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் கால்கடுக்க நின்று கொண்டுதான் 'சுகமாக' பிரயாணம் செய்யவேண்டி இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதே போதுமானதாகும். மூன்றும் வகுப்புப் பிரயாணம் முழுமோசம். பிரயாண ஆர்வத்தையே குலைத்துவிடும். கொடுப்பதைக் கொடுத்து குட்டநோய்க்காரர் காலில் விழுவதற்கு ஒப்பானதாகும்.

இந்த அவலட்சணமான புகை வண்டிப் பிரயாணத்திற்கும் புது வரி விதிக்க நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரி துணிந்துவிட்டிருக்கின்றார். பொதுவாக மைல் கட்டணத்தை மேலும் உயர்த்த அவர் முன்வரவில்லை.

ஆனால், முப்பது கல்லுக்குட்பட்ட பிரயாணத்திற்கு 5 சத விகிதமும், ஐந்நூறு கல்லுக்குட்பட்ட பிரயாணத்திற்கு 15 சத விகிதமும், அதற்கு மேற்பட்ட பிரயாணத்திற்கு 10 சத விகிதமும் கட்டண வரி விதித்திருக்கின்றார், நிதிஅமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்.

இப்புதுவரி விகிதப்படி ஒரு ரூபாய் கட்டணத்திற்கு இனி ஒரு ரூபாய் ஐந்து காசுகள் செலுத்தவேண்டும். இரண்டு ரூபாய் கட்டணத்திற்கு பேற்கொண்டு பதினைந்து காசுகள் கூடுதலாக செலுத்தவேண்டும்.

மிகுதியும் ஏழை மக்களைத்தான் இப்புது விகிதம் பாதிக்கும் எனச் சொல்லத் தேவையே இல்லை. இதுபற்றி மக்கள்சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட பலரும் வன்மையாகக் கண்டித்துக் கூறியுள்ளனர்.

அரசாங்கத்துறைகள் அனைத்திலும் ஊழல் மலிந்துள்ள துறை புகைவண்டித் துறைதான் என்பதை எடுத்துக் காட்டாதவர்கள் அருமெபாருள். மிக மிக மந்தமாகச் செயலாற்றுவதிலும், புகைவண்டித் துறைக்கு புகைவண்டித் துறையே இணையாகும்.

புகைவண்டித் துறையின் காலதாமதம் குறித்து பஞ்சாப் காங்கிரசு உறுப்பினர் ஒருவர் 'அத்துறையில் இருக்கும் சிகப்பு நாடா உறுதியானதும் நீளமானதும் ஆகும்' என்று இடித்துரைத்து, அதற்குச் சான்றுகளையும் காட்டியுள்ளார்.

புகை வண்டித் துறையின் பல பிரிவுகளிலும் நிகழ்ந்து வரும் ஊழல்களையும் ஊதாரிச் செலவுகளையும் கண்டறிந்து, அவைகளைக் களைந்தெறிய அரசாங்கம் முன்வருமானால், இக்கட்டண உயர்வுக்கே அவசியமிருக்காது என்று பி. எஸ். பி. உறுப்பினர் ஒருவர் காரசாரமாக மக்கள் சபையில் பேசியுள்ளார்.

அவர் குறிப்பிடும்பொழுது, 'லெக்கரி விலே' என்ற செலவு வகையில் 12 கோடி ரூபாய் கூடுதலாகக் காரணம் என்ன என்றும், 18 மாதங்களுக்கு முன் 30 கோடி ரூபாயாக இருந்தது 51 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது என்றும் கேட்டு, இவ்விலை உயர்வை ஆராய ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முன்வரும்பட்சத்தில் ஓட்டை இருக்கும் இடத்தை அதனுல் தெரிந்து கொள்வது சாத்தியமாகும் என்றும் கோரியுள்ளார். அதேபோன்று 'பாதுகாத்தல்' என்ற வகையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 90 கோடியும் தமக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை எனக் குறிப்பிட்டிருப்பதுடன், அதுபற்றி விசாரித்தறியவும் அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டுள்ளார்.

சில இருப்புப் பாதைகளில் மின்சார ஏற்பாடுகளுக்காகவும், இரட்டை இருப்புப்பாதை அமைத்தற்காகவும் ரூ. 150 கோடி ஒதுக்கி இருப்பது அவசியமில்லை என்றும், அத்தொகையைக் கொண்டு இருப்புப்பாதை இல்லாத ஊர்களுக்குப் புதிய இருப்புப்பாதைகளைப் போடுவதின் மூலம் வளர்ச்சியின்றிக் கிடக்கின்ற பகுதிகளை வளர்ச்சிப் பெற்றுள்ள பகுதிகளுடன் இணைக்கப் பயன்படுத்த வேண்டும் என்று சென்னை காங்கிரசு உறுப்பினர் ஒருவர் கோரியுள்ளார்.

கருதப்பட்டிருக்கும் மின்சார ஏற்பாடுகளை நிறுத்திவைத்து, பிரயாணக் கட்டணத்தை உயர்த்துவதைக் கைவிடவேண்டும் என்று மக்கள் சபை எதிர்க் கட்சித் தலைவர் கோரியுள்ளார்.

புகை வண்டித்துறை அமைச்சருக்குப் பதிலாக நிதிஅமைச்சர் புகைவண்டிப் பிரயாணக் கட்டணத்தை உயர்த்துவதை அரசியல் சட்டம் அனுமதிக்கின்றது என்றாலும், அதே அரசியல் சட்டம் அனுமதிக்கும் விமானப் பிரயாணக் கட்டணத்தை உயர்த்த நிதிஅமைச்சர் விரும்பாது புகைவண்டிப் பிரயாணக் கட்டணத்தை உயர்த்த மட்டும் விரும்பியது ஏன் என்று மற்றொரு சென்னை காங்கிரசு உறுப்பினர் கேட்டுள்ளார்.

மற்றொரு காங்கிரசு உறுப்பினர் உடைந்த உள்ளத்துடன் பேசியுள்ளார்:—

"என்னுடைய தொகுதியில் தங்கள் வாழ்நாள் முழுவதும் புகைவண்டியைக் கண்டறியாதவர்கள் இன்றும் ஆயிரக் கணக்கில் உள்ளனர்.

"என் தொகுதி முழுவதிலுமாக ஐந்து அல்லது ஆறு கல் தொலைவுக்குத்தான் 1906-ம் ஆண்டில் போடப்பட்ட இருப்புப்பாதை இருக்கிறது.

"நான் இப்படி இங்கு கூறுவது அனைந்தும் மணமான ஒருவன் தனது பிரச்சினைகளை மணமாகாத ஒருவனிடம் விவாதிப்பதற்கு ஒப்பாகும்."

புகை வண்டிப் பிரயாணக் கட்டண உயர்வைக் கண்டித்து யார் பேசினால்தான் என்ன? எருதின் புண் காக்கை அறியுமோ?

வீண் செலவைக் குறைக்கும்

திருமணத் திட்டம்

புதுடில்லி, மே 22—

மதச் சடங்குகளிலும், சமூக விழாக்களிலும் வீண் செலவைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தை கிராம மக்களிடையே வலியுறுத்த ஓர் சமுதாய திருமண திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

முசோரியில் நடைபெற்ற அபிவிருத்தித் திட்ட மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. மாதர் சங்கங்கள், ஊராட்சி, கிராமாட்சி மன்றங்களே இந்த பொறுப்பை முக்கியமாக ஏற்று நடத்தும்.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள முற்போக்கு எண்ணங்கொண்ட தலைவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும்பெற்று இந்தத் திட்டம் அமுல் நடத்தப்படுமாம்.

பரிசீலனையில் இருக்கிறதாம்!

புதுடில்லி, மே 21—

சென்னைக்கும் இரங்கூனுக்கும் இடையே கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யும்படி, மத்திய சர்க்காரைச் கேட்டு, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து விண்ணப்பமொன்று வந்துள்ளது என்றும், இது குறித்து பரிசீலனை செய்துவருவதாகவும் ராஜ்யங்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

ஜப்பானியத் துணி பேரத்தில் பல இலட்சம் ரூபாய் பாழ்!

டெல்லியின் நிர்வாக இலட்சணம்

புதுடில்லி, மே 22—

1947-ம் ஆண்டில் ஜப்பானியத் துணி வாங்கியதில் இந்திய சர்க்காரின் திறமைக் குறைவினுல் ரூ. 55-இலட்சம் நஷ்டமேற்பட்டது குறித்து பொதுக் கணக்குக் குழு தகவல் தந்துள்ளது.

ஆறு கோடி ரூபாய செலவு செய்து, கடந்த 1947-ம் ஆண்டில் ஜப்பானிலிருந்து 8 கோடி கெசம் துணி வாங்கியது, இந்திய சர்க்கார்!

ஆனால், அந்தத் துணியை இந்தியாவில் விற்க முடியாது போயிற்று; காரணம், அந்தத் துணியின் அதிக விலையே!

எனவே, பின்னர் அந்தத் துணி, மற்றொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது; இந்த வியாபாரத்தினுல், ரூ. 55-இலட்சம் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டது.

"'டெக்ஸ்டைல் கமிஷனரு'க்கும், சர்க்காரின் வர்த்தக இலாகாவிற்குமிடையே சரியான ஒத்துழைப்பு இருந்திருக்குமானால், இந்த நஷ்டம் தவிர்த்திருக்கப்பட முடியும்" என்று கூறி, இனியேனும் இதுபோல நஷ்டம் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் பொதுக் கணக்குக் குழு கூறியிருக்கிறது.

துறைமுக ஊழியர்கள்

குறைகளைப்பற்றி ஆராய தனி அதிகாரி நியமனம்

புதுடில்லி, மே 21—

சென்னைத் துறைமுகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பள நிர்ணயபோர்டு ஒன்றை நியமிக்குமாறு கோரவில்லை என்றும், மூன்றுவது நான்காவது பிரிவு ஊழியர்களின் ஊதிய விகிதங்களை மட்டுமே உயர்த்தும்படி கேட்டுள்ளனர் என்றும் மத்தியப் போக்குவரத்து அமைச்சர் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய அடிப்படையில் எல்லாத் துறைமுகங்களிலும் பணியாற்றும் 3-வது 4-வது பிரிவு ஊழியர்களின் குறைகளைப் பற்றி ஆராய்ந்து முடிவுகளை அறிவிக்க ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

73,53,340 பேர்!

இரயில்வேக்களில் டிக்கெட்டின்றி பிரயாணம் செய்தனராம்!

புதுடில்லி, மே 22—

1956—57-ல், டிக்கெட் இல்லாமல் இரயில்களில் பிரயாணம் செய்தவர்களின் மொத்த எண்ணிக்கை 73,53,340 என்றும், ரூ. 1,58,92,951 நாடு முழுமையிலும் இரயில்வேக்களில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்தவர்களின் மூலம் வசூலிக்கப்பட்டது என்றும், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இரயில்வே துணை அமைச்சர் ஷா நவாஸ் கான் தெரிவித்துள்ளார்.

ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் - பலகைகள்

சென்னை, மே 21—

1956—57-ம் ஆண்டிற்கு பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள், பலகைகள் விநியோகம் செய்ய நகரசபை, ஊராட்சி, மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கு ரூ- 17,87,000 மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதில் சென்னை நகரசபைக்கு ரூ. 11,700 மட்டுமே கிடைக்கும்.

நஷ்ட ஈடு தரும் நடவடிக்கை

சுமார் ரூ. 14 - கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்

புதுடில்லி, மே 21—

பர்மாவில் அரசாங்கம் வசப்படுத்திக்கொண்ட நிலங்களுக்கு நஷ்டஈடு தரும் நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது என்றும், இதற்காக ரூ. 13,76,00,000 பர்மா அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என்றும், அதில் இந்தியருக்கு நஷ்டஈடாக சுமார் ரூ. 3 கோடி கொடுக்கப்படும் என்றும் மக்கள் சபையில் பண்டித நேரு கூறியுள்ளார்.

புதிய 5 ரூபாய் நோட்டுகள்!

சென்னை, மே 21—

இப்போதுள்ள ரிசர்வ் பாங்கியின் கவர்னர் எச். வி. ஆர். ஐயங்கார் கையொப்பத்துடனும், அசோக சக்கரத்தில் சில மாறுதல்களுடனும் கூடிய புதிய 5 ரூபாய் நோட்டுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும், விரைவில் புழக்கத்திற்குவரும் என்றும் ரிசர்வ் பாங்கியின் அறிக்கையொன்று கூறுகிறது.

பழைய 5 ரூபய் நோட்டுகளும் செல்லுபடியாகும்.

ஆங்கிலம்-இந்தி சொல்லகராதியாம்!

ரூ. 1 இலட்சம் செலவாம்!

புதுடில்லி, மே 21—

ஆங்கிலம்—இந்தி சொல்லகராதியின் தொகுப்புக்காக இதுவரை ரூ. 1 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என்றும், இது சம்பந்தமான கையெழுத்துப் பிரதி 1957-ம் ஆண்டு இறுதிக்குள்ளாகத் தயாராகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், சொல்லகராதியை வெளியிடுவது பற்றி அதன் பின்னர் பரிசீலிக்கப்படும் என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி தொழிலுக்கு மத்திய நிதி உதவி

புதுடில்லி, மே 21—

1956-ம் ஆண்டில், கைத்தறித் துணியின் உற்பத்தி, சுமார் 6,80,00,000 கெசம் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

'1956, அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து 1957 ஏப்ரல் 30-ந் தேதிவரையுள்ள காலத்தில், கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக, மாநில சர்க்கார்களுக்குக் கடனுதவியாகவும், மானியமாகவும் மொத்தம ரூ. 3,25,71,943 வழங்கப்பட்டுள்ளது; என்றும் மத்திய வர்த்தக மந்திரி மக்கள் சபையில் தகவல் தந்துள்ளார்.

வடநாட்டுத் துறைமுகங்களுக்கு

நவீன சாதனங்கள்!

புயல், மழைக் காலங்களில் தாமதமின்றியும், பாதுகாப்பாகவும் கப்பல்கள், துறைமுகத்திற்குள் வந்து செல்ல வழிகாட்டக் கூடிய நவீன சாதனங்களை பம்பாயிலும் கல்கத்தாவிலும் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்களாம்!

அதிகாரங்கள் அனைத்தும் டில்லியில்!

இந்த நிலையால் பாதிக்கப்படுகிறது தென்னாடு

கன்னங்குறிச்சி தி. மு. கழகத் துவக்க விழாவில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் பேச்சு

சேலம், மே 20—

சேலம் அருகே உள்ள கன்னங்குறிச்சியில் 19-ந் தேதி மாலை தி. மு. கழகக் கிளையை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கிவைத்தார்.

இவ் விழாவிற்கு, கன்னங்குறிச்சி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ஆறுமுகம்(கவுண்டர்) தலைமை வகித்தார்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., கழகக் கொடியினை ஏற்றிவைத்துப் பேசினார்.

ஆரம்பத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்,

கழகத் திறப்பு விழாக் கூட்டத்திற்கு, இதுவரையில் கன்னங்குறிச்சியில் கண்டிராத அளவுக்கு மக்கள் திரளாகக் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுச்செயலாளர் அவர்கள் தி. மு. கழகக் கிளைத் திறப்பு விழாப் பேச்சில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியப் பேரரசினர் ஏராளமாக வரிகளை விதித்து, வடநாட்டை செழிப்படையச் செய்கிறார்கள். வடநாட்டில் நடைபெறும் திட்டங்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. தென்னாட்டில் உள்ள திட்டங்களுக்கோ இலட்சக்கணக்கில்தான் செலவழிக்கப்படுகிறது.

"பெரிய வரிகளை விதிக்கும் அதிகாரங்களை மத்தியப் பேரரசினர் தங்கள் கையில் வைத்துக் கொண்டு, சிறிய வரிகளை விதிக்கும் அதிகாரங்களைமட்டும் மாகாண அரசியலாருக்கு அளித்துள்ளனர். பாதிக்கப்படுவது தென்னாட்டு மக்கள்தான்."

வாக்குச் சீட்டில் குறியிடும் முறை

ஆட்சிமன்றத் தேர்தல்களில் மீண்டும் அமுலாகுமாம்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, மே 20—

தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூர் ஆட்சிமன்றத் தேர்தல்களில் வாக்குப் பதிவுச் சீட்டில், குறியிடும் முறையையே நிரந்தரமானதாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது.

இந்த குறியிடும் முறை, சமீபத்தில் நடைபெற்ற ஊராட்சி, மாவட்ட ஆட்சி, நகராட்சிமன்றத் தேர்தல்களில் மேற்கொள்ளப்பட்டது.

பல ஓட்டுப் பெட்டிகள் முறையைப் பார்க்கிலும் குறியிடும் முறை உயர்ந்ததாகவும், வெற்றிகரமாகவும் காணப்பட்டதாம்.

குறியிடும் முறையில் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றனவாம்; அதைச் சீர்திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறதாம்.

வாக்காளர் பதிவுச் சீட்டில் குறியிடும் முறை சிக்கனமானதென்றும், தேர்தல் நடவடிக்கை செலவு மிகவும் குறையுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பல வாக்குப் பெட்டிகளை வைத்து நடத்தப்படும் தேர்தலில் உள்ள ஊழல்களும் பெரும் அளவுக்குக் குறையுமெனக் கருதப்படுகிறதாம்.

ரூ. 40 கோடி மதிப்புள்ள அரிசி, கோதுமை இறக்குமதி

ராஜ்யங்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே 21—

1956-ம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட அரிசி, கோதுமை ஆகியவற்றின் மொத்த விலை மதிப்பு ரூ. 40 கோடியாம்!

அரபு நாடுகளிடை பிளவு ஏற்படுமென அச்சம்

மன்னர் இராக் கோரிக்கை நிராகரிப்பு

பாக்தாத், மே. 20—

அரபு நாடுகள் அங்கம் வகிக்கும் ஒரு கம்யூனிஸ்டு எதிர்ப்பு முன்னணியை, அமைக்குமாறு சவூதி அரேபியா மன்னரை இராக் மன்னர் கேட்டுக்கொண்டதாகவும், ஆனால், அரபு நாடுகளுக்கிடையே இதனால் பிளவு ஏற்படும் என்று அஞ்சி, சவூதி அரேபியா மன்னர் அந்த கோரிக்கையை நிராகரித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

காலதாமதம் ஏற்பட நியாயமில்லையாம்!

ஆட்சி மொழிக் குழு அறிக்கை பற்றி உள்நாட்டு அமைச்சர்

புதுடில்லி, மே. 20—

ஆட்சி மொழிக் குழு தந்துள்ள அறிக்கையை வெளியிடாமல் இந்தியப் பேரரசு தாமதப்படுத்தி வருவது தெரிந்த ஒன்றாகும்.

இதைப்பற்றி ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், உள்நாட்டு அமைச்சர் பந்த், ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கை, அரசியல் சட்டத்தின் 44-வது பிரிவுப்படி பாராளுமன்றக் குழுவின் ஆலோசனைக்கு விடப்பட்டு பின்னர், அக்குழு அறிவிக்கும் தேதியில் அறிக்கை வெளியிடப்படு மென்றும், அக்குழுவை நிறுவுவதற்கான ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகவும், இதில் காலதாமதம் ஏற்படுவதற்கு நியாயமில்லை என்றும் கூறியுள்ளார்.

ஏற்காடு மலைவகுப்பினர் தொகுதி மறு தேர்தல் பிரசாரம்

தி. மு. கழக அபேட்சகரை ஆதரித்து மு. கருணாநிதி பேச்சு

சேலம், மே 20—

ஏற்காடு மலைவகுப்பினர் தொகுதியின் மறு தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர் சின்ன கவுண்டரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரக் கூட்டம் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ஓமலூரில் 19-ந் தேதி இரவு எஸ். ஆர். அர்த்தனாரி தலைமையில் தி. மு. க. தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி, எம். எல். ஏ., அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தேர்தலில் காங்கிரசைவிட எதிர்க் கட்சிகளுக்குத்தான் அதிக வாக்குகள் கிடைத்தன; இருப்பினும், எதிர்க் கட்சிகள் ஒற்றுமையின்றி ஒன்றுடன் மற்றொன்று போட்டியிட்டுக் கொண்டதன் விளைவாக காங்கிரசு அதிக இடங்களைப் பெற முடிந்தது.

"நாடகம் ஆடுகிறவர்களுக்கு சட்டசபையில் என்ன பேசத் தெரியும்?' என்று கூறிவந்த காங்கிரஸ்காரர்கள், இப்பொழுது சட்டசபையில் தி. மு. கழக உறுப்பினர்கள் எவ்வாறு பேசுகிறார்கள் என்று உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்.

"ஜனவரி, பிப்ரவரியைத் தவிர மீதி எல்லாவற்றிற்கும் இந்தியப் பேரரசினர் வரி விதித்து இருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம் என்று கூறி, ஏழைகளுக்கு வரி மேல் வரி விதிக்கிறார்களே தவிர, ஏழைகளுக்கு நன்மை செய்வதாகக் காணோம்.

"காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளுக்கு நீங்கள் மேலும் மேலும் இடமளிக்கக்கூடாது. வருகிற ஏற்காடு மறுதேர்தலில், இம்மாதம் 27-ந் தேதியன்று தி. மு. கழக அபேட்சகருக்கு 'உதயசூரியன்' சின்னமுள்ள பெட்டியில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

தோழர் ப. கண்ணன் அவர்கள் பேசுகையில், 'தற்பொழுது காங்கிரஸ் ஆட்சியினர் விதித்த புது வரிகள் சரிதான்', என்றால், மக்கள் காங்கிரசுக்கு ஓட்டளிக்குமாறும், 'காங்கிரஸ் ஆட்சியினர் விதித்த புது வரிகள் தவறானவை' என்று நினைத்தால் தி. மு. கழக அபேட்சகருக்கு ஏற்காடு மறு தேர்தலில் ஓட்டளிக்குமாறும் குறிப்பிட்டார்.

ஏற்காட்டில் கூட்டம்

ஏற்காட்டில் சேலம் மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினர் தோழர் ஆனைமுத்து தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் 19-ந் தேதியன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், சென்னை வழக்கறிஞர் இராமன், மற்றும் பலர் பேசினர். (ந. நி.)

புதுடில்லி, மே 21—

1956-57-ம் ஆண்டில் செகண்டரி கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக பல்வேறு மாநிலங்களுக்கு மொத்தம் ரூ. 3,50,05,696 மானியம் வழங்கப்பட்டதாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

புதுவரிகள் கண்டன நாள்

26-5-57 ஞாயிறன்று நாடெங்கும் எதிர்த்து முரசறைவீர்

26—5—57 ஞாயிற்றுக்கிழமையை, புதிய வரிகள் விதிப்பிற்கு நாடெங்கும் கண்டனம் தெரிவிக்கும் நாளாகக் கொண்டு, ஆங்காங்கு அமைதியான முறையில், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தி மக்களின் எதிர்ப்புக் குரலை, தீர்மானங்கள் மூலம் காட்டி, இந்தியப் பேரரசினரும், சென்னை அரசினரும் உணரும்படி ஆவனவெல்லாம் செய்ய முன்வருமாறு தி. மு. கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

20—5—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம் உலகு அறிய

'HOMELAND'

ஆங்கில வார இதழ்] [ஆசிரியர்: அண்ணா

2--6--57 முதல் ஞாயிறுதோறும்
வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா — ஆண்டு சந்தா ரூ 7.

விவரங்கட்கு: நிர்வாகி, 'ஹோம்லேண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு : காஞ்சீபுரம்

சாக்ரடீஸ் — சகுந்தலா சீர்திருத்தத் திருமணம்:

'வாழ்க்கை நடத்தும் பொறுப்பைப் பெற்றுள்ளனரா என்பது அவசியம்'

ஒரே நியதி இல்லாதத் திருமண முறை பற்றி பொதுச்செயலாளர்

சேலம், மே 19—

சேலம் தோழர் அ. சித்தையன் அவர்கள் செல்வன் சாக்ரடீசுக்கும்—செவ்வாய்ப்பேட்டை பி. வி. குப்புசாமி அவர்கள் செல்வி சகுந்தலாவிற்கும் 19—5—57 காலை, அரிசிப் பாளையத்தில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சீர்திருத்த முறையில் இந்தத் திருமணம் நடைபெறுவதைக் கண்டு வியப்படையத் தேவையில்லை. காரணம், தோழர் சித்தையன் அவர்களும் தோழர் சாக்ரடீசும் சீர்திருத்தக் கருத்தைப் பரப்பி வருகிறவர்கள். ஆகவே, இந்தத் திருமணம் சீர்திருத்த முறையில் அல்லது வேறு வகையில் நடந்திருந்தால் வியப்படையலாம்.

"திருமணத்தை ஏற்பாடு செய்யும்பொழுது, மணமகனும் மணமகளும் வாழ்க்கை நடத்தும் பொறுப்பையும், வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்களா என்பதைக் கவனிக்கவேண்டும். இதைத்தவிர, இந்த முறையில்தான் திருமணத்தை நடத்தவேண்டும் என்ற நியதி கிடையாது. எந்த முறையில் திருமணம் நடத்தவேண்டும் என்பதை யாரும் வகுத்துக் கூறவில்லை. உலக மக்கள், திருமணங்களை நடத்த ஒரே முறையைக் கையாளுவதில்லை; ஊருக்கு ஊர்—குடும்பங்களுக்குக் குடும்பம்—சாதிக்கு சாதி திருமண முறைகள் மாறி இருக்கின்றன. வைதீக முறைகள் எல்லாம் மாறி இப்பொழுது சீர்திருத்தமுறையில் திருமணங்கள் நடக்கும் பழக்கம் நாட்டில் அதிகமாகி வருகிறது.

"திருமணங்களை அதிகச் செலவில் நடத்தக்கூடாது. சிக்கனமான முறையில் திருமணங்களை நடத்தவேண்டும்."

மணமக்களை வாழ்த்தி தோழர்கள் டி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். கே. பேபி-கந்தசாமி, டாக்டர் கே. ஆர். கோபால், வழக்கறிஞர் இராமன், வேல்முருகன், பி. ரத்தினசாமி பிள்ளை மற்றும் பலரும் பேசினர். மணமக்களை வாழ்த்தி ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்திருந்தன.

திருமண விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் தோழர் அ. சித்தையன் நன்றி கூறினார். (ந-நி.)

சேலம் - செவ்வாய்ப்பேட்டை

நெசவாளர் கூட்டுறவு சங்கம்

தோழர் கே. ஏ. நடராசன் தலைவராகத் தேர்வு

செவ்வாய்ப்பேட்டை, மே 15—

13—5—57 காலை 9 மணியளவில், சேலம் - செவ்வாய்ப்பேட்டை, 10. வைத்தி செட்டித் தெருவில், செவ்வாய்ப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி - விற்பனைச் சங்கத் திறப்பு விழா, சேலம் மாவட்ட கலெக்டர் திரு. எம். ஜி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, சென்னை மாநில கைத்தறித் துறை இயக்குநர் திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்கள், சங்கத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார்.

பிற்பகல் நடைபெற்ற சங்க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் பி. கே. ஜெயராம், பி. ஏ. சித்தையன், பி. என். பெருமாள், பி. என். சந்திரய்யா, எம். இ. துரைசாமி, கே. ஏ. நடராசன், பி. ஆர். ரங்கசாமி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர் கே. ஏ. நடராசன் அவர்கள் தலைவராகவும், தோழர் பி. என். சந்திரய்யா அவர்கள் துணைத் தலைவராகவும், தோழர் பி. ஏ. சித்தையன் செயலாளராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ஒ. நி.)

சென்னை மாநிலத்தில் விற்பனை வரி அமைப்பு

திருத்தியமைக்கப்படுமோ?

சென்னை, மே 22—

சென்னை மாநிலத்தில் விற்பனை வரியின் அமைப்பையும், அதன் அடிப்படையையும், ஆராய்ந்து நியாயமானமுறையில் வரி விதிப்பது சம்பந்தமாகவும், திருத்தி அமைப்பது பற்றியும் யோசனைகூற டாக்டர் பி. எஸ். லோகநாதனை சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது என்று தெரியவருகிறது.

மத்தியதர வகுப்பாரின் அவலநிலை

வருமானத்தை பெருக்கிக்கொள்ள ஒரு யோசனை

பம்பாய், மே 21—

போதுமான வருமான மின்மை, வீட்டு வசதியின்மை இவை தவிர, நாளோருவண்ணம் வளரும் கடன்கள் இவைதான் மத்தியதர வகுப்பாரின் கலக்கத்திற்குக் காரணமாகும்.

“இந்தக் காரணத்தினால்தான் அவர்கள், தங்களை அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு எதிராகப் பெரும் புரட்சி செய்கிறார்கள்.

என்று பம்பாய் முன்னாள் மேயர் டாக்டர் பெர்னாண்டெஸ், மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசிய அவர் குறிப்பிட்டதாவது :—

“தங்களால் முடியாத அளவுள்ள ஒரு வாழ்க்கைத் தரத்தோடு வாழ வேண்டுமென்று நினைக்கிறஒரு போலிகவுரவத்தினால்தான் பெரும்பாலான மத்தியதர வகுப்புக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையைச் சமாளிக்க பெண்கள் தங்களின் ஓய்வு நேரத்தில், ஏதாவது வேலை செய்து சம்பாதிக்க முயலவேண்டும். படிக்கும் மாணவர்களும் தங்களின் விடுமுறை காலத்தில் ஏதேனும் சம்பாதிக்க முயற்சிக்க வேண்டும்.”

புதிய வரி விதிப்பின் எதிரொலி

நியாய விலைகள் அறிவிப்பு

புதுடில்லி, மே 22—

1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட பிரரேபணைகளில் சுமார் 90 புதிய வரிகள் விதித்துள்ளதின் விளைவாக வியாபாரிகள், நாட்டு மக்களின் அன்றாடத் தேவையான பொருள்களின் விலையை அளவுக்கு மீறி உயர்த்தியிருப்பதால், பொருள்களின் நியாய விலைகள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளது :—

தேயிலை மீதான தீர்வையில் பவுண்டு ஒன்றுக்கு 20 புதிய காசுகளும், காப்பிமீது 16·25 புதிய காசுகளும் மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. இதைக் கொண்டு காப்பி விலையை நிர்ணயித்தால் மூன்று ‘கோப்பை’கள் காப்பிக்கு 1 புதிய காசே கணக்காகிறது; எனவே, வியாபாரிகள் முன்பிருந்த விலைக்கே இவற்றை விற்க வேண்டியதுதான் நியாயமானதாகுமெனக் கூறப்பட்டிருக்கிறது.

40 குச்சிகள் அடங்கிய தீப்பெட்டி 4 புதிய காசுகளுக்கும், 60 அடங்கிய பெட்டி 6 புதிய காசுகளுக்கும் விற்கப்பட வேண்டியதே நியாயமானதாகும்.

சர்க்கரை பவுண்டுக்கு 5 புதிய காசுகளும், சேருக்கு 10 புதிய காசுகளும், வீசைக்கு சுமார் 16 புதிய காசுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் இதைவிட அதிகம் கேட்பது நியாயமற்றதாகும் என்றும், காகிதம் பவுண்டுக்கு $1\frac{1}{2}$ புதிய காசு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாவர எண்ணெய்கள்மீது பவுண்டுக்கு 2 புதிய காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது; ஆனால், நாட்டு செக்குகளில் தயாரிக்கப்படும் சரக்குகளுக்கு வரி விதிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

80 பேருக்கு மட்டுமே அனுமதியாம்!

பிரச்சினைகள் பல ஏற்படுமாதலால் பலரை அனுப்ப இயலாதாம்!

புதுடில்லி, மே 23—

மாஸ்கோவில் நடைபெற இருக்கும் வாலிபர் விழாவில் கலந்துக் கொள்வதற்குஅ.இ.அடிபடையில் அனுமதிக்கப்பட்டுள்ள 11 வாலிபர் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கும் 80 பேரை மட்டுமே அனுப்புவதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்!

இதுபற்றி மக்கள் சபையில் தகவல் தந்த பண்டிதர், அனுமதி கோரியுள்ள எல்லோரையும் அனுப்புவதென்றால் அந்நிய நாணயச் செலாவணி போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுமென்று கருதியே அவ்வாறு முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

அணு ஆயுதப் பரிசோதனைகள்

நிறுத்துமாறு கோரிக்கை

முப்பெரும் வல்லரசுகளுக்கு மக்கள் சபை வேண்டுகோள்

அணு ஆயுத சோதனைகளை உடனடியாக நிறுத்துமாறு வல்லரசுகளைக் கோரும் தீர்மானமொன்று மக்கள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தை பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனன் கொண்டு வந்து பேசினார்.

பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, நிராகரிக்கப்பட்டன.

கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், இந்தச் சோதனைகளை நிறுத்துவதற்காக, ரஷ்யா மேற்கொண்ட முன் முயற்சிகளை பாதுகாப்பு மந்திரி பாராட்டாததுகண்டு தான் வருந்துவதாகக் கூறினார்.

உடனே, பண்டித நேரு இதற்குப் பதிலளிக்கையில், ‘சில நாடுகள், இந்த சோதனை வெடிகளை நிறுத்தவேண்டுமெனத் திட்டம் கூறுகையிலேயே, தொடர்ந்து சோதனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்று கூறியிருக்கிறார்.

“நிதானமான முறையில் தான் இந்தியா, தனது கோரிக்கையை வெளியிடுகிறது என்றாலும் வன்மையுடன்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது; அது மட்டுமின்றி, இந்தியப் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதென்றால், அது சிறிய விஷயமல்ல” என்று பண்டித நேரு, ‘அணு ஆயுதங்கள் பிரச்சினை பற்றி பேசுவதற்கு வல்லரசுகளின் மேலதிகாரிகளை அழைத்துப் பேச வேண்டும்’ என்ற வேண்டுகோளை நிராகரித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மே 25 : ஏற்காடு தொகுதிக் கூட்டங்கள்

26 : காலை—திருப்பூர் சிறப்புக் கூட்டம்
மாலை — கோவை முத்தமிழ் விழா

27 : மாலை — மங்கநல்லூர்
இரவு—மாயவரம்

‘பிக்-பாக்கெட்’ அமைச்சரோ?

புதுடில்லி, மே 23—

இரயில் நிலையங்களில், ‘திருடர்கள் எச்சரிக்கை’ என்ற பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளதல்லவா? இதுபற்றி மக்கள் சபையில் குறிப்பிட்டபோது, சபை சிரிப்பில் ஆழ்ந்துள்ளது!

“இரயில் கட்டணங்களை உயர்த்தி ஒவ்வொருவர் பையிலிருந்தும் இரயில்வே அமைச்சரே ‘ஜேப்படி’ செய்யும்போது பிரயாணிகளுக்கு எச்சரிக்கை செய்வதற்காக ‘திருடர்கள் எச்சரிக்கை’ என்றுள்ள அந்தப் பலகைகளை அகற்றிவிடுமாறு யோசனை கூறுகிறேன்” என்று, இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய பிரோஸ் காந்தி குறிப்பிட்டார்.

பிரான்சில் நெருக்கடி

அரசாங்கம் கவிழ்ந்தது

பாரிஸ், மே 22—

பிரான்சில் மோலே அரசாங்கம் நேற்று கவிழ்ந்துவிட்டது.

பிரான்சின் நிதிக் கொள்கை மீது பிரதம மந்திரி மோலே, நம்பிக்கை வாக்கு கோரினார். அரசாங்கத்திற்குப் பாதகமாக 250 வாக்குகளும், சாதகமாக 213 வாக்குகளும் கிடைத்துள்ளன.

மோலே அரசாங்கம் 15 திங்கள் 19 நாட்கள் பதவியில் இருந்துள்ளது. உலகப் போருக்குப் பிறகு எந்த அமைச்சரவையும்இவ்வளவு காலம் பதவியில் இருந்ததில்லை. வாக்கெடுப்பு முடிந்தவுடன் தனது அமைச்சரவையின் இராஜினாமாவை மோலே சமர்ப்பித்துவிட்டார்.

மேற்கு வங்கத்தில் வரிகளுக்கு எதிர்ப்பு

மே 30-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம்

கல்கத்தா, மே 23—

மேற்கு வங்கத்தின் எதிர்க்கட்சிகள் அனைத்தும்கூடி ஒரு குழு அமைத்துள்ளதல்லவா? அக்குழு, பண்டங்களின் விலைவாசி உயர்வைப் பற்றி விவாதித்தபின், வரும் 30-ந் தேதியன்று நாடு முழுமையிலும் ‘பொது வேலை நிறுத்தம்’ நடத்துவதென முடிவு செய்திருக்கிறது.

தபால்-தந்தி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வர்?

சர்க்காருக்கு எச்சரிக்கை

புதுடில்லி, மே 22—

தங்களது கோரிக்கைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக தாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டியிருக்கும் என்று, அகில இந்திய தபால்-தந்தி இலாகா ஊழியர் சங்கச் செயற்குழு முடிவு எடுத்துள்ளது என்று தெரிய வருகிறது.

ஊழியர் சங்கம் 30 அம்சக் கோரிக்கை மனு ஒன்றை இந்திய சர்க்காருக்கு முன்பே தந்துள்ளது.

செயற்குழுவினர் தங்கள் முடிவினை தங்களது கிளைகள் அனைத்திற்கும் அனுப்பி கருத்தறிவிக்குமாறு கேட்டுள்ளனர் என்றும், இறுதி முடிவு நெருங்கிக்கொண்டிருக்கும் மாநாட்டில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிய வருகிறது.

“ஊழியர்களிடை நாளுக்கு நாள் அதிருப்தி பெருகி வருகிறது; சர்க்காரோ, தங்களது மிக அவசர அவசியமான கோரிக்கைகளைக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை; இந்த நிலையில், புதிய வரிகள் மூலம் புதிய பொருளாதாரச் சுமைகள் வேறு சுமத்தப்படுகின்றன; இதனால் ஊழியர்களின் அதிருப்தி மேலும் வளருகிறது” என்றும் செயற் குழுவினர் கூறியுள்ளனர்.

ஏற்காடு தொகுதியில் பொதுச்செயலாளர்

நிகழ்ச்சி விவரம்

25—5—57 சனியன்று பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஏற்காடு தொகுதி தேர்தல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் விவரம் இங்கு தரப்படுகிறது :—

காலை	9-00 மணி :	கருப்பூர்
,,	9-20 ,,	வெள்ளாளப் பட்டி
	9-40	குள்ளக் கவுண்டனூர்
	10-15	ஓமலூர்
	10-35	தாராபுரம்
	11-15	கொட்டிபுரம்
பகல்	12-00 மணி :	சரக்கப் பிள்ளையூர்
,,	12-30 ,,	பண்ணப் பட்டி
	1-00	பூசாரிப்பட்டி
மாலை	4-00 மணி :	தீவட்டிப் பட்டி
,,	4-20 ,,	நடுப்பட்டி
	4-50	குண்டுக்கல்
	5-20	கொங்குப் பட்டி
	5-45	காருவள்ளி
	6-20	பெரியப் பட்டி
	7-00	மூங்கிலேரி — செட்டிப் பட்டி
இரவு	7-30 மணி :	முத்து நாய்க் கன்பட்டி
,,	8-00 ,,	பாகல்பட்டி
	9-15	அயோத்திப் பட்டணம்

கழகக் கூட்டங்கள்

★

பந்தநல்லூர் :
பந்தநல்லூர் பூங்காவில்
24—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழக 3-வது ஆண்டு விழா
தலைவர் : பி. ஏ. லிங்கன்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
ம. கோ. மணி
நா. செல்வதுரை
எம். கண்ணு

★

உத்தமபாளையம்—அம்மாப்பட்டி :
25-5-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் திறப்பு விழா
தலைவர் : பெ. பரமசிவம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எம். எஸ். இராமசாமி

★

செ. நா. பாளையம்—நடுவீரப்பட்டு :
25—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சே. மூசா
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
இரே. இளம்வழுதி
கே. ஏ. வேலு
எம். எஸ். சண்முகம்

★

வைலியங்குடி :
(நெல்லை மாவட்டம்)
25—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் திறப்பு விழா
தலைவர் : எல். சதாசிவம்
கொடியேற்றுபவர் :
நடராசன்
பேசுபவர் :
நாஞ்சில் பி. இ. கண்ணப்பா

★

இலகாம்பூர் :
(திருச்சி மாவட்டம்)
25—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : இரா. நாராயணன்
துவக்குபவர் :
என். வி. நடராசன்

★

சாத்தூர் :
வடக்கு ரத வீதியில்
25—5—57 அன்று
தலைவர் : எம். நடராசன்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
டபிள்யூ. டி. துரைசாமி

மு. கருணாநிதி

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

மே 24 : மேட்டுப்பாளையம் — (முசிறி) : ஊராண்மைக்கழக வரவேற்பு — பொதுக்கூட்டம்

25 : எடமேலையூர் (தஞ்சை)

26 : மாலை 3 மணிக்கு: குடவாசல்(பாரத் சேவக் சமாஜ சிறப்புக் கூட்டம்)
மாலை 6 மணிக்கு : மன்னார்குடி

30 : குளித்தலை

சென்னை—நுங்கம்பாக்கம் இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

24—5—57 இரவு 7 மணிக்கு, எண் 12, இராமாநுஜம் செட்டித் தெரு. ‘வெள்ளி வீதி’ அலுவலக மாடியில் தோழர் இரா. சம்பந்தன் தலைமையில், மேற்படி மன்றச் சொற்பயிற்சிக் கூட்டத் துவக்க விழா நடைபெறும்; தோழர் முல்லைசத்தி அவர்கள் துவக்கிவைப்பார். தோழர்கள் வ. சங்கரநாராயணன், பா. சரவணன், க. முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பழந்தண்டலம் மாணவர் மன்ற ஆண்டு விழா

24—5—57 மாலை 6-30 மணி அளவில், பழந்தண்டலம் கிராம—மாணவர் மன்ற 2-ம் ஆண்டு விழா, தோழர் ஏ. கிருட்டினன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, திரு. கா. அப்பாதுரையார் அவர்களும், மற்றும் பலரும் சிறப்புரையாற்றுவர்.

புது கும்மிடிபூண்டி தி. மு. கழக ஆண்டு விழாவும்-மேதின விழாவும்

25—5—57 மாலை 6 மணியளவில் புதுகும்மிடிப்பூண்டி தி. மு. கழக 2-வது ஆண்டு விழாவும்—மே தின விழாவும் தோழர் ஆ. கிருட்டினன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்), ஆடலழகன், ப.செ. தூயமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

25—5—57 மாலை 6-30 மணி அளவில் வடகோவை தி. மு. கழகப் பணிமனையில் 12-வது சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் சுந்தரம் தலைமையில் நடைபெறும்; அதுபோது, ‘பகுத்தறிவு’ எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

25—5—57 இரவு 7 மணிக்கு, சேலம் — அம்மாப்பேட்டை 23-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், தோழர் கோ. ஆ. பழனிசாமி அவர்கள் இல்லத்தில், தோழர் க. ப. சுப்பிரமணி தலைமையில் ‘வடநாடும்—தென்னாடும்’ எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

24—5—57 இரவு 7 மணிக்கு, சென்னை — சைதாப்பேட்டை பழைய மாம்பலம் ரோடு, எண் 16 இல்ல மேல்மாடியில், தோழர் எம். என். தேவராசு தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

தனுஷ்கோடியில்

‘நம் நாடு’ விற்பனையாளர்

கே. தோரைசாமி(நாயுடு)
மளிகை வியாபாரம்
பள்ளிவாசல் தெரு,
தனுஷ்கோடி.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.